**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**மூன்றாம் ஆண்டு – ஐந்தாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி – பிப்ரவரி 2020**

**D011 பண்டைய இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. கலித்தொகையில் கபிலர் பாடிய பாடல்களின் எண்ணிக்கை என்ன?
2. நுவ்வை என்பதன் பொருள் என்ன?
3. ஒருநாள் – அரைநாள் என்பதில் வரும் தொடை யாது?
4. குறுந்தொகைப் பெண்பால் புலவர்களின் பெயர் இரண்டினைக் கூறுக.
5. ஐங்குறுநூற்றின் மருதத்திணைப் பாடல்களைப் பாடியவர் யார்?
6. வேட்கைப் பத்து என்பதில் வேட்கையின் பொருள் என்ன?
7. அகநானூற்றின் வேறுபெயர் யாது?
8. அகநானூற்றினைத் தொகுத்தவர் யார்?
9. சிறுபாணாற்றுப்டையின் பாடலடிகள் எத்தனை?
10. சிறுபாணாற்றுப்படையின் பாட்டுடைத்தலைவன் யார்?
11. உறந்தை எந்த நாட்டின் தலைநகரம்?
12. முதிர மலைக்குத் தலைவன் யார்?
13. ஏம வாழ்க்கை என்பதன் பொருள் யாது?
14. எட்டுத்தொகையின் புற நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

15. செங்கை மறவர் என்பதன் பொருள் என்ன?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. சிலம்புகழி நோன்பு என்றால் என்ன?
2. நன்னன் – குறிப்பு வரைக.
3. ஐந்திணையின் உரிப்பொருள்களை எழுதுக.
4. அகநானூற்றில் காணலாகும் வரலாற்றுச் சிறப்பினை விவரி.
5. விறலியின் வருணனைகளைக் குறிப்பிடுக.
6. எயிற்பட்டிணத்தின் சிறப்புகளை கூறுக.
7. பாரி மகளிர் பாடிய பாடலின் கருத்துகளைக் குறிப்பிடுக.
8. ஊன்துவை அடிசில் பாட்டு உணர்த்தும் செய்திகள் யாவை?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. அ. நற்றிணையில் இடம்பெறும் இயற்கைக் காட்சிகளைத் தொகுக்க.

(அல்லது)

ஆ. குறுந்தொகையில் இடம்பெற்றுள்ள உவமை குறித்த செய்திகளைக் கட்டுரைக்க.

2. அ. ஐங்குறுநூற்றின் குறிஞ்சித்திணைப் பாடல்களில் இடம்பெற்றுள்ள முப்பொருள்கள் குறித்து ஆராய்க.

(அல்லது)

ஆ. அகநானூற்றில் இடம்பெற்றுள்ள எண்சுவைகளையும் தொகுத்தெழுதுக.

3. அ. நல்லியக்கோடனின் கொடைத்திறத்தைப் புலப்படுத்துக.

(அல்லது)

ஆ. அதியமானின் சிறப்புகளைப் புறநானூற்றின் வழி நின்று நிறுவுக.

***